பக்கங்கள் 20+4

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 20 ஞாயிற்றுக்கிழமை 22.02.2026 | அதிர்வு 205

## பஸ் - மோ.சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் மரணம்!

கம்பஹா – தனோவிட்ட பகுதியில் இடம்பெற்ற கோர வாகன விபத்தில் 21 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் 06

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## ‘13’ திருத்தம் பேசப்படவில்லையா? ரில்வினின் கூற்று உண்மையானதா?

# இந்தியா மௌனம் கலைக்க வேண்டும்

### சங்குக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் வலியுறுத்து

இந்திய விஜயத்தின்போது 13 ஆவது திருத்தம் அல்லது அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்படவில்லை என ஜே.வி.பி. கூறுவதில் எந்தளவுக்கு உண்மை இருக்கின்றது எனத் தெரியவில்லை என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர்சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

**ஜே.வி.பியினரின் கூற்றுக்கு மறுப்பு**

அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து ஊடகங்களிடம் கருத்துரைத்த சுரேஷ் பிரேமச்சந்திரன், இக்கூற்றுத் தொடர்பில் தனது சந்தேகத்தை வெளியிட்டார். 06



### மக்கள் செல்வாக்கைச் சோதிக்க இதுவே வழி

# மாகாண சபைத் தேர்தலை உடனே நடத்திக் காட்டுங்கள்



### அரசுக்கு ரோஹித எம்.பி. பகிரங்க சவால்

“அரசின் மீதான மக்கள் செல்வாக்கு எந்த நிலையில் உள்ளது என்பதைப் பரிசோதிக்க உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்.”

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன அரசுக்குச் சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அநுர அரசு தமக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாக இன்னமும் நம்பினால், துணிச்சலுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். மக்கள் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை 07

# ரயிலுடன் கப் வாகனம் மோதி கோர விபத்து!
# இரண்டு இளைஞர்கள் பரிதாப உயிரிழப்பு!!




(க.மகாதேவன்)

காலியிலிருந்து மருதானை நோக்கிப் பயணித்த “காலி குமாரி“ கடுகதி ரயிலுடன் கப் ரக வாகனமொன்று மோதி விபத்துக்குள்ளானதில், இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் பயாகலை பகுதியில் அமைந்துள்ள ரயில் கடவையில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

ரயிலுடன் மோதிய கப் வாகனம், தண்டவாளத்தில் சுமார் 50 மீற்றர் தூரம் வரை இழுத்துச் செல்லப்பட்டு உருக்குலைந்துள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மூவர் களுத்துறைபோதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 22 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

விபத்துக்குள்ளான வாகனம் அருகில் உள்ள கட்டுமானத் திட்டமொன்றில் பணிபுரியும் ஒருவருக்குச் சொந்தமானது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ரயில் கடவையில் பொருத்தப்பட்டுள்ள சமிஞ்சை கட்டமைப்பு நீண்டகாலமாகச் சரியாக இயங்கவில்லை எனவும், அங்கு முறையான பாதுகாப்பு கேட்கள் பொருத்தப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சமிஞ்சை விளக்குகள் சரியாகச் செயற்படாததே விபத்துக்கான பிரதான காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து காரணமாக இன்று காலை கரையோர மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து சில மணிநேரம் வரை தாமதமடைந்தது.

சம்பவம் தொடர்பில் பயாகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ராஜபக்ஷ கூட்டணியை சிறையில் அடைப்பதே அநுர அரசின் ஒரே குறி

## ரோஹித எம்.பி. கடும் சாடல்

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதை விடுத்து, ராஜபக்ஷக்களைப் பற்றியும், அவர்களின் சகாக்கள் பற்றியுமே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பதுடன், அவர்களைச் சிறையில் அடைப்பதிலேயே குறியாக இருக்கின்றது."

– இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன கடுமையாகச் சாடியுள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:–

"அநுர அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து அரசியல் பழிவாங்கல்களிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றது. ஓர் அரசின் பணி அரசியல் எதிரிகளைச் சிறைக்கு அனுப்புவது அல்ல. இத்தகைய கீழ்த்தரமான அரசியல் கலாசாரம் நாட்டுக்கு எவ்வித நன்மையும் தராது. ராஜபக்ஷக்களைப் பழிவாங்குவதை ஒரு கொள்கையாக வைத்துக்கொண்டு இந்த அரசு இயங்கி வருகின்றது.

ஏன் இன்று மகா சங்கத்தினர், அரச ஊழியர்கள் மற்றும் விவசாயிகள் இந்த அரசுக்கு எதிராக வீதியில் இறங்குகின்றார்கள் என்பதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறுகிய காலத்துக்குள்ளேயே இவ்வளவு பெரிய மக்கள் அதிருப்தி ஏன் எழுந்துள்ளது? மக்களின் உண்மையான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு செயற்படுவதை விடுத்து, பழிவாங்கல் அரசியலில் ஈடுபட்டால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்." – என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

மக்கள் வழங்கிய ஆணையை முறையாகப் பயன்படுத்தி நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமே தவிர, பழைய பகைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அதைப் பயன்படுத்தக் கூடாது என்றும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. மேலும் வலியுறுத்தினார்.

# காலியில் காணித் தகராறு காரணமாக முதியவர் ஒருவர் அடித்துப் படுகொலை!

## தப்பியோடிய நபருக்கு வலைவீச்சு

காலி மாவட்டம், நெலுவ, மில்லவ பிரதேசத்தில் நேற்று நண்பகல் ஏற்பட்ட காணித் தகராறு ஒன்றின் காரணமாக நபர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மொரவக்க, பொல்கஸ்ஓவிட்ட பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய கடேவத்த வெலிகமகே ஜவன் என்ற முதியவரே உயிரிழந்துள்ளார் என்று காலி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் இணைந்து பஹல மில்லவ பிரதேசத்தில் தமக்குச் சொந்தமான காணியில் வேலை செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த மொரவக்க பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு நபருடன் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தர்க்கம் முற்றிய நிலையில், அந்த நபர் தடியால் தாக்கியதில் முதியவர் உயிரிழந்துள்ளார்.




இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவரின் மனைவியும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மொரவக்க வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

தப்பியோடியுள்ள சந்தேகநபரைக் கைது செய்வதற்காக, காலி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.சி. புஷ்பகுமாரவின் ஆலோசனைக்கமைய, நெலுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பதிஜீவ தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# திருடர்களைப் பிடிப்பது பழிவாங்கல் அல்ல; அது தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையே!

## ரோஹிதவுக்கு அமைச்சர் நளிந்த தக்க பதிலடி

### ராஜபக்ஷக்களைக் கண்டு நாம் ஏன் அஞ்ச வேண்டும்? சட்டத்தின் முன் அனைவரும் சமமே என்றும் அதிரடி



"கடந்த காலங்களில் நாட்டைச் சூறையாடியவர்கள் மற்றும் ஊழல்வாதிகளுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதை 'அரசியல் பழிவாங்கல்' எனக் கூறி ரோஹித அபேகுணவர்தன போன்ற ராஜபக்ஷ அணியினர் தப்பிக்க முடியாது."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ காரசாரமாகப் பதிலடி கொடுத்துள்ளார்.

அநுர அரசு ராஜபக்ஷக்களையும், அவர்களின் சகாக்களையும் சிறையில் அடைப்பதிலேயே குறியாக உள்ளது என ரோஹித அபேகுணவர்தன எம்.பி. முன்வைத்த குற்றச்சாட்டுக்கு ஊடகங்களிடம் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் கூறுகையில்:–

"ராஜபக்ஷக்களையும் அவர்களின் சகாக்களையும் பற்றிச் சிந்திப்பதற்கு எங்களுக்கு எந்த அவசியமும் இல்லை. அவர்கள் இப்போது ஓர் அரசியல் சக்தியே கிடையாது. ஆனால், தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் மக்கள் சொத்தைத் திருடியவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எமது அரசின் நிலைப்பாடு. அதைச் செய்யும் போது திருடர்களுக்குப் பயம் வருவது இயல்பானதுதான். அதைத்தான் இவர்கள் 'பழிவாங்கல்' என்று கூச்சலிடுகின்றார்கள்.

விவசாயிகள், மீனவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பற்றிப் பேச ரோஹிதவுக்கு எந்த அருகதையும் இல்லை. இவர்களது ஆட்சிக் காலத்தில்தான் விவசாயிகள் உரமில்லாமலும், மீனவர்கள் எரிபொருள் இல்லாமலும், மக்கள் வரிச்சுமையாலும் வீதிக்கு வந்தார்கள். அந்தப் பாவங்களைச் சரிசெய்யவே நாம் இன்று பாடுபடுகின்றோம். ராஜபக்ஷ அணியைப் பாதுகாப்பது எமது பணியல்ல, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதே எமது பணி.

குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவது அரசின் கடமையாகும். முறையான விசாரணைகளின்றி யாரையும் சிறையில் அடைக்க மாட்டோம். ஆனால், ஆதாரங்களுடன் சிக்கியவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்குத் தகுந்த தண்டனை பெற்றுத் தருவதில் இந்த அரசு பின்வாங்காது." – என்றும் அவர் மேலும் எச்சரிக்கை விடுத்தார்.

# 20 அடி பள்ளத்தில் பாய்ந்த லொறி! சாரதி உட்பட இருவர் படுகாயம்!!

### வேடிக்கை பார்க்கச் சென்றவருக்கு நேர்ந்த கதி பஸ் சக்கரத்தில் சிக்கி அவரின் கால் நசுங்கியது



ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை சிங்கள மகா வித்தியாலயத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டனிலிருந்து தங்கொட்டுவ நோக்கி அதிவேகமாகப் பயணித்த லொறி ஒன்று, வீதியை விட்டு விலகி சுமார் 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து புரண்டதிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

எதிரே வந்த மற்றொரு லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாவதைத் தவிர்க்க முயன்ற போதே, தனது லொறி கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் வீழ்ந்தது என்று விபத்துக்குள்ளான லொறியின் சாரதி தெரிவித்துள்ளார்.

லொறியின் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த சாரதியை வட்டவளை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடும் போராட்டத்துக்கு மத்தியில் மீட்டுள்ளனர்.

படுகாயமடைந்த சாரதியும் உதவியாளரும் முதலில் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, லொறி விபத்துக்குள்ளான இடத்தில் மற்றுமொரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று இவ்விடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

அதில் பயணித்த பயணி ஒருவர், லொறி விபத்தை வேடிக்கை பார்ப்பதற்காக கீழே இறங்கியுள்ளார். பின்னர் மீண்டும் பஸ்ஸில் ஏற முயன்றபோது, பஸ்ஸின் முன் சக்கரத்தில் சிக்கி அவரது கால் நசுங்கியுள்ளது. படுகாயமடைந்த அவரும் சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வட்டவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சந்தன கமகே தலைமையிலான போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகள் இவ்விரு விபத்துக்கள் குறித்தும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனநாயகத்தை முடக்கியவர்களுக்கு தேர்தல் பற்றிப் பேச அருகதை இல்லை

## அமைச்சர் வசந்த சமரசிங்க காட்டம்



“மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் நீண்டகாலமாகத் தடுத்து நிறுத்தியவர்களே இன்று தேர்தலை நடத்துமாறு சவால் விடுவது வேடிக்கையானது.” – என்று தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்களில் ஒருவரான வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரசின் மக்கள் செல்வாக்கைப் பரிசோதிக்கத் தேர்தலை நடத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன விடுத்த சவாலுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்:–

“கடந்த காலங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போட்டு, ஜனநாயகத்தை முடக்கியவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ரோஹித அபேகுணவர்தன போன்றவர்கள் அன்று அதிகாரத்தில் இருந்த போது தேர்தலைப் பற்றிப் பேசவில்லை. இன்று தமக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ள முற்படுவது நகைப்புக்குரியது.

அரசு தற்போது கடந்த கால ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட சீரழிவுகளையும், பொருளாதாரக் குழப்பங்களையும் சரிசெய்து கொண்டிருக்கின்றது. தேர்தலை நடத்துவதில் எங்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. உரிய நடைமுறைகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர், மாகாண சபைத் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும். அப்போது மக்கள் யாருக்குப் பாடம் புகட்டுவார்கள் என்பதை ரோஹித போன்றவர்கள் நேரில் பார்ப்பார்கள்.” – என்று அவர் காரசாரமாகப் பதிலளித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை தேர்தல்களின் போது நிரூபிக்கப்படும் என்றும், இவ்வாறான “வாய்ச்சவடால்களுக்கு” அஞ்சப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




### பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து:

# நண்பனைப் பார்க்கச் சென்ற இளைஞர் பரிதாப உயிரிழப்பு!

## மேலும் இருவர் கவலைக்கிடம்

காலி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் காலி – கிந்தோட்டை பகுதியைச் சேர்ந்த இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இரத்கம, பிந்தாலிய சந்தியில் இடம்பெற்ற மற்றுமொரு விபத்தில் சிக்கிய தனது நண்பர்கள் இருவரைப் பார்ப்பதற்காகக் காலி போதனா வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இரத்கம பகுதியில் இடம்பெற்ற அந்த முந்தைய விபத்திலும் ஒரு இளைஞர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்தில் கிந்தோட்டை மற்றும் தத்தல்ல பகுதிகளைச் சேர்ந்த 18 வயதுடைய இரு இளைஞர்கள் பலத்த காயமடைந்துள்ளனர். அவர்கள் இருவரும் தற்போது காலி போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

நண்பனின் விபத்துச் செய்தி கேட்டு விரைந்தவர்கள், அதே வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் விபத்துக்குள்ளான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இந்தியா மௌனம்

### இந்தியாவின் நிலைப்பாடு

"இலங்கை அரசின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகளின்போது, இந்தியா இவ்விடயங்கள் குறித்து அழுத்தமாகவோ அல்லது மேலோட்டமாகவோ தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இவ்வாறான பின்னணியில், இம்முறை இது பற்றிப் பேசப்படவில்லை என ரில்வின் சில்வா கூறுவது எந்தளவுக்கு உண்மையாக இருக்க முடியும்?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், இது தொடர்பில் இந்தியாவே தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### மாகாண சபைத் தேர்தல்

இந்தியாவின் அழுத்தங்களுக்கு அப்பால், மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கு இருப்பதாகக் குறிப்பிட்ட அவர், அந்தத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கான பொறுப்பை அரசு நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

---

## பஸ் - மோ.சைக்கிள்...

ஒன்று, அதற்கு எதிர்த் திசையில் வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திய இளைஞர் உடனடியாக வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் தம்புள்ளை பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அதேவேளை, விபத்தில் படுகாயமடைந்த பெண் பயணி வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தனோவிட்ட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# புதிய அரசமைப்பை பூஜ்ஜியத்திலிருந்து தொடங்க வேண்டிய அவசியம் இல்லை

## பழைய வரைவுகளே அடிப்படை என நீதி அமைச்சர் ஹர்ஷன சுட்டிக்காட்டு



புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகளை ஆரம்பத்திலிருந்தோ அல்லது பூஜ்ஜியத்திலிருந்தோ தொடங்க வேண்டிய அவசியம் இல்லை என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்ட வரைவுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிகளைத் தொடர முடியும் என்றும் ஊடகங்களிடம் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே நீதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிக்கு அமைவாக, புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் நிச்சயம் முன்னெடுக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் இதன்போது உறுதியளித்தார்.

இது குறித்து அவர் மேலும் விளக்கு கையில்:-

"புதிய அரசமைப்புக்காக நாம் மீண்டும் ஆரம்பத்திலிருந்து பணிகளைத் தொடங்க வேண்டியதில்லை. கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரால் தயாரிக்கப்பட்ட பல வரைவுகள் மற்றும் ஆவணங்கள் ஏற்கனவே கைவசம் உள்ளன. அவற்றைப் பரிசீலித்து, சிறந்த அம்சங்களை உள்வாங்கி இந்தப் பணிகளைத் தொடர முடியும்." - என்றார்.

அரசைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவும் (பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் போன்றவை) கூட முற்றிலும் புதிதாக உருவாக்கப்படாமல், முன்னைய வரைவுகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டது என்பதை அவர் உதாரணமாகக் குறிப்பிட்டார்.

கடந்த கால வரைவுகளை அடிப்படையாகக் கொண்டு பணிகள் முன்னெடுக்கப்படும் என்று கூறிய போதிலும், அரசமைப்பு உருவாக்கப் பணிகளை நிறைவு செய்வதற்கான துல்லியமான காலவரையறை குறித்து இப்போதைக்கு உறுதியாகக் கூற முடியாது என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேலும் தெரிவித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மாகாண சபை...**

இருந்தால் தேர்தலை அறிவியுங்கள். எதிர்க்கட்சியாகிய நாங்கள் எந்நேரமும் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம்." - என்றார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் அது நிரந்தரமானது என்று எண்ணக் கூடாது என எச்சரித்த அவர், "அதிகாரம் என்பது தற்காலிகமானது என்பதை வரலாறு உணர்த்தும். அதிகாரம் பறிபோகும் போது மக்கள் எங்களை எள்ளிநகையாடினார்கள், ஆனால் இப்போது ஆளும் தரப்பினரை மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றார்கள். எனவே, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துங்கள்" - என்றும் அவர் அறிவுறுத்தினார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதிகாரம் யாரிடம்?

அதிகாரப் பிரயோகங்கள் மற்றும் மக்களின் இறைமை தொடர்பான விடயங்கள் இலங்கை அரசமைப்பில் மிகத் தெளிவாக வரையறுத்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

நாட்டின் நிறைவேற்றதிகாரம் ஜனாதிபதியின் தலைமையில் பிரயோகிக்கப்படும். சட்டவாக்கல் அதிகாரம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட நாடாளுமன்றத்திற்கு உரியது. நீதித்துறை அதிகாரம் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

இதுதான் அரசமைப்பு ஏற்பாடு. சட்ட ஒழுங்கு.

இந்த அதிகாரங்களைப் பிரயோகிக்கும் தரப்புகளைப் பொறுத்தவரை ஜனாதிபதியையும் சட்டவாக்கலை மேற்கொள்ளும் நாடாளுமன்றத்தையும் மக்கள் தங்கள் வாக்குரிமை என்ற இறைமை மூலம் தெரிவு செய்வார்கள் என்பதுதான் அரசமைப்பு ஏற்பாடு.

ஆகவே நிறைவேற்றதிகாரத்தை நெறிப்படுத்தும் முழுப் பொறுப்பும் ஜனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் நிறைவேற்றதிகார ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதுதான் அரசமைப்பில் குறிக்கப்பட்டுள்ள விடயம். அதாவது நாட்டில் நிறைவேற்றதிகார விடயங்களைப் பிரயோகிப்பதற்கான முழுத் தற்றுணிவு அதிகாரங்களையும் கொண்டவர் ஜனாதிபதிதான்.

தற்போதைய அரசமைப்பு நடைமுறைக்கு வந்த இந்த முதல் 46 ஆண்டு காலமும் அதுதான் நடைமுறையில் இருந்து வந்தது. நிறைவேற்றதிகாரத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகளே அதனைப் பிரயோகித்து, கையாண்டு, நெறிப்படுத்தி வந்தார்கள். இப்போது, இது விடயத்தில் நிலைமையில் ஒரு மாற்றம் இருக்கின்றமையை ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா வெளிப்படையாகவே கூறியிருக்கிறார்.

“இப்போதைய அரியணைக்கு - ஆட்சிப் பீடத்திற்கு - பின்னால் இருக்கும் உண்மையான சக்தி ஜே.வி.பியின் பொதுச் செயலாளரான நீங்கள் என்பதுதானே பொதுவான கருத்து” - என்ற ஒரு கேள்வி அவர் முன் வைக்கப்பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் - அவர் குறிப்பிட்ட - விடயங்கள்தான் கவனிக்கத்தக்கவை.

“முன்னர், அரசாங்கங்கள் ஒரு தனிநபரால் நடத்தப்பட்டன. ஒருவர் நிர்வாகத் தலைவராக ஆனபோது, அவர் தனியாகச் செயல்பட்டார். மற்றவர்கள் ‘ஆம்’ மனிதர்களாக மாறி தலைவரைப் பின்பற்றினர். நாங்கள் வேறுபட்டவர்கள். நாங்கள் ஏதேனும் புதிய முடிவுகளை எடுக்கும்போது, நாங்கள் தேசிய மக்கள் சக்தியாக ஆலோசித்து இந்த மாற்றங்களைச் செயல்படுத்துகிறோம். அதோடு, அமைச்சரவையும் அதன் சொந்த முடிவுகளை எடுக்கிறது. நாங்கள் கொள்கை முடிவுகளை எடுக்கும்போது, தேசிய மக்கள் சக்தி தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி என்பதையும், கூட்டு முடிவுகளை எடுப்பதையும் நாங்கள் நினைவில் கொள்கிறோம். ஒரு நபர் அனைத்து முடிவுகளையும் எடுத்து பின்னர் அவற்றை செயல்படுத்த முற்படுவதில்லை.”

ஆக, அரமைப்பினால் வழங்கப்பட்ட நிறைவேற்றதிகாரத்தை ஜனாதிபதி தற்றுணிவில் பிரயோகிக்கவில்லை. தங்களின் தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டுக் கட்டமைப்பு அதனை பிரயோகிக்கின்றது என்பதைச் சொல்லாமல் சொல்ல வருகிறார் ரில்வின் செல்வா.

ஆழமாகக் கூர்ந்து நோக்கினால் இது நிறைவேற்றதிகாரப் பிரயோக விடயத்தில் முழு அளவில் அரசமைப்பு மீறலாகக் கொள்ளத்தக்கது.





# சித்தன்கேணி ஸ்ரீகணேசா மாணவர்களின் பண்ணிசை திருக்கேதீஸ்வர ஆலயத்தில்

திருக்கேதீஸ்வர ஆலயத்தில், சித்தன் கேணி ஸ்ரீகணேச வித்தியாலய மாணவர்களின் பண்ணிசை நிகழ்வானது மகா சிவராத்திரி நாளன்று இடம்பெற்றது.

திருமதி ஜ.வினித்தா, திருமதி ப.சிவாஸ்கரன் ஆகியோரது பயிற்றுவிப்பில் தபேலா– க. ரஜிதாஸின் பக்கவாத்தியத்துடன் இந்த மாணவர்களின் ஆன்மீக நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## முஸ்லிம் சமூகமும் சிவில் அமைப்புகளும்

# பேராசிரியர் திஸ்ஸவிதாரணவுக்கு நன்றியுடன் இரங்கல் செய்ய வேண்டும்

### கலீலூர் ரஹ்மான் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

முஸ்லிம் சமூகமும் சிவில் அமைப்புகளும், பேராசிரியர் திஸ்ஸவிதாரணவுக்கு நன்றியுடன் இரங்கல் செய்ய வேண்டும் என்று கலீலூர் ரஹ்மான் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றுநோய் பரவல் காலத்தில் முஸ்லிம் ஜனாஸாக்களைக் கட்டாய தகனம் செய்யும் கோத்தா அரசின் கொள்கைக்கு எதிராக, அவற்றை மதச்சார்பான முறையில் நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று திறந்தவெளியில் வலியுறுத்தியவர் முன்னாள் அமைச்சரும் பிரபல அரசியல்வாதியும் கல்வியாளருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண. அவரது மறைவை முன்னிட்டு முஸ்லிம் சமூகமும் சிவில் அமைப்புகளும் நன்றியுடன் இரங்கல் தெரிவிக்க வேண்டும்.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பல்வேறு சவால்களையும், ஆழமான உணர்ச்சி வேதனைகளையும் எதிர்கொண்ட முஸ்லிம் சமூகத்தின் மனஉளைச்சலை ஆழமாகப் புரிந்துகொண்ட ஒருவர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண. அறிவியல் அடிப்படையிலான அணுகுமுறையையும் மனிதநேயப் பார்வையையும் இணைத்து, ஜனாஸாக்களை மதச்சடங்குகளுக்கு ஏற்ப நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்குவது பொதுச் சுகாதாரத்துக்குப் பாதிப்பாக அமையாது என்பதை அவர் தெளிவாக விளக்கினார்.

அந்தக் காலகட்டத்தில் நிலவிய அச்சம் மற்றும் அரசியல் அழுத்தங்களைக் கருத்தில் கொண்டபோதிலும், சமூக நீதி, மதச்சார்பற்ற சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் என்பன பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அவரது நிலைப்பாடு பலருக்கும் துணிவூட்டியது.




பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வேதனையைப் புரிந்து கொண்டு, அவர்களின் மத உணர்வுகளுக்கு மரியாதை வழங்க வேண்டும் என்ற அவரது குரல், ஒற்றுமைக்கான அழைப்பாக அமைந்தது.

பல்வேறு இன, மத சமூகங்களுக்கிடையே புரிதலை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தியிருந்தார். அதனால், அவரது மறைவு ஒரு அரசியல்வாதியின் இழப்பாக மட்டுமல்லாது, மனிதநேயக் குரலொன்றின் இழப்பாகவும் கருதப்பட வேண்டும்.

எனவே, அவரின் மறைவை அடுத்து முஸ்லிம் சமூகத் தலைவர்கள், உலமாக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து நன்றியுணர்வுடன் இரங்கல் தெரிவிப்பது, கடந்த காலத்தில் அவர் எடுத்த மனிதநேய நிலைப்பாட்டுக்கு உரிய மரியாதையாகவும், சமூக ஒற்றுமைக்கு வலுசேர்க்கும் நடவடிக்கையாகவும் அமையும்.

பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவின் சேவைகள் என்றும் வரலாற்றில் நினைவு கூரப்பட வேண்டியவையாகும்.– என்று தெரிவித்துள்ளார்.




# கிவுல் ஓயாத் திட்டத்தில் குடியேற்றம் இடம்பெறாது!

## தேசிய மக்கள் சக்தி எம்.பி. பிரபு கந்தசாமி கூறுகிறார்

(வி.ரி.சகாதேவராஜா)

இன்றுபேசுபொருளாக இருக்கக்கூடிய கிவுல் ஓயாத் திட்டத்தின் பிரதான நோக்கம் மகாவலியினூடான நீர்ப்பாசனமே. மாறாக அங்கு எந்த குடியேற்றமும் ஒரு போதும் இடம்பெறாது.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபு கந்தசாமி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மக்கள் உட்பட நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்தி மீதும், எமது ஜனாதிபதி மீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்து இருக்கின்றார்கள். அது ஒருபோதும் வீணாகாது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களை எமது அரசு ஒரு போதும் கைவிடாது.

எதிர்க்கட்சியினர் கிவுல் ஓயாத் திட்டம் மற்றும் பிரஜா சக்தி போன்றவற்றை தமது அரசியல் எதிர்காலம் கருதி எதிர்த்து வருகிறார்கள். அது மக்களைப் பாதிக்கலாம்.

எனது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் உள்ள 3000 ஏக்கரில் 1400 ஏக்கர் நிலம் மகாவலிக்கும், மீதி 1600 ஏக்கர் வனவள திணைக்களத்துக்கும் சொந்தமானது.

நான் அந்த பண்ணையாளர்களை கிரான் மற்றும் செங்கலடி பிரதேச செயலாளர்கள் சகிதம் சென்று சந்தித்தேன். அவர்களது தேவைகள் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடினோம்.

அவர்கள் நலன் கருதி முதல் கட்டமாக மகாவலிக்குச் சொந்தமான 1400 ஏக்கர் நிலத்தை விடுவிக்க முயற்சி எடுத்து வருகிறோம்.

நான் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுதும், இனமத பேதமின்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வருடத்தில் 100 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமான அபிவிருத்தியை செய்திருக்கின்றேன்.

பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டங்களில் மக்கள் பிரச்சினைகளைத் தேவைகளை அரசியல் கண்ணோட்டத்தில் பார்ப்பதால்தான் அது வேடிக்கையாக மாறி வருகிறது.

உறுப்பினர்கள் சிலர் அதனை தேர்தல் களமாக மாற்ற முயற்சிப்பதால் வேடிக்கையாக இருக்கின்றது. இனி அதற்கு இடமளிக்க முடியாது. அதனை மாற்றச் சுற்று நிருபமும் வந்துள்ளது.

கடந்த ஆட்சியாளர்கள் போல் இனவாதத்தை ஆயுதமாக வைத்து நாங்கள் செயற்படப் போவதில்லை. எம்மில் இனவாதப் போக்கு இல்லை. நாம் அதற்கு எதிரானவர்கள். ஜனாதிபதி திறமையாக எவ்வித பேதமின்றி செயல்பட்டு வருகின்றார். அவரிடமும் இனவாத போக்கு இடமில்லை. எனவே எமது அரசு மக்களது பிரச்சினைகளை இனமத பேதம் கடந்து பொதுவாகவே தீர்த்து வைக்கும். யாரும் அஞ்சத்தேவையில்லை.- என்றார்.

# அக்கரைப்பற்றில் நூல் வெளியீட்டு விழா




(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று நசாக் முகம்மட் அலி எழுதிய "இயற்கையின் சீற்றங்களும், சமூக பொருளாதார தாக்கங்களும்" நூல் வெளியீட்டு விழா அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

உதவி பிரதேச செயலாளர் எஹியா றாஸீத் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி எம்.எம்.பாஸீல், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், ஓய்வு நிலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.நவாஸ், இலக்கியவாதிகள், கலைஞர்கள், கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



நூலின் வாழ்த்துரையை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். அப்துல் றஸாக் நிகழ்த்தினார். நூலாசிரியரால் அதிதிகளுக்கு நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன.









# மட்டக்களப்பு நாவற்குடாவிலுள்ள சின்ன லூர்து ஆலயத் திருவிழா!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மடடக்களப்பு, நாவற்குடா தூய சின்ன லூர்து அன்னை திருத்தலத்தின் 118 ஆவதுவருடாந்தஆலயதிருவிழாகொண் டாடப்பட்டது.

ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்து கெபியானது நிர்மாணிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவு (1966 - 2026) வைரவிழா யூபிலி திருவிழாவாகவும் இது அமைந்திருந்தது.

இந்தத் திருவிழாத் திருப்பலியானது, மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளார் தலைமையில், நாவற்குடா பங்குத்தந்தை அருட்பணி ஏ.ஜேசுதாசன் அடிகளாரும் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இந்தத் திருவிழாத் திருப்பலியில் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு லூர்து அன்னையின் ஆசீரைப் பெற்றனர். நாவற்குடா வாழ் இறைமக் கள் மட்டுமன்றி ஏனைய வெளிப்பங்கு கள் மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்தும் இறைமக்கள் லூர்து அன் னையின் தரிசனத்தை தேடி வந்திருந் தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திருவிழாத் திருப்பலியின் நிறைவில், அன்னையவரின் திருச் சொரூபமானது பக்தர்கள் புடைசூழ, அன்னையின் கெபியைச் சுற்றி ஊர்வ லமாகக் கொண்டுவரப்பட்டது.

திருவிழாவின் முக்கிய நிகழ்வாக கெபி நிர்மாணிக்கப்பட்டதன் 60 ஆவது ஆண்டு நிறைவு வைரவிழா யூபிலி கொண்டாட்டத்தின் நினைவுக் கல் லானது, மட்டக்களப்பு மறைமாவட்ட குருமுதல்வர் அவர்களால் ஆசீர்வதிக் கப்பட்டு இனிதே திறந்துவைக்கப்பட் டது.

# இலவச மடிக் கணினி வழங்கும் திட்டம் 20 ஆம் கட்ட விநியோகம் கொழும்பில்!

(திகாமடுல்ல நிருபர்)

ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவர்க ளுக்கு இலவச மடி கணினி வழங்கும் வேலைத் திட்டத்தின் 20 ஆம் கட்ட விநி யோகம் கொழும்பில் இடம்பெற்றது.

பௌண்டேசன் தலைவர் புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சிரேஷ்ட ஒலி, ஒளி பரப்பாளர் உமர்லெப்பை யாக்கூப் பிரதம அதிதியாகவும், பிரபல இசை அமைப்பாளர் சுருதி பிரபா, பவுண் டேசனின் பணிப்பாளர் மரியம் ஹாஷிம் உமர், மேமன் கவி, எழுத்தாளர் ராதா மேத்தா, ஊடகத் துறை அமைச்சின் புல னாய்வு அதிகாரி ஜிப்ரியா இப்ராஹிம், ஜௌபர், சுயதீன தொலைக்காட்சி நிறு வனத்தின் தமிழ் செய்தி முன்னாள் முகாமையாளர் சித்திக் ஹனீபா, உட்பட கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# உலக சாரணிய இயக்க ஸ்தாபகர் பேடன் பவல் தினம் தேசிய ரீதியில்

(ஜலீல் ஜீ)

உலக சாரணிய இயக்கத்தின் ஸ்தாபக ரான ரொபேட் பேடன் பவள பிரபுவின் 169 ஆவது பிறந்த நாள் நினைவு நிகழ்வு தேசிய ரீதியில் இன்று தேசிய சாரணர் தலைமைக் அலுவலகத்தல் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் பிரதமர் கலாநிதி ஹரிணி பிரதம அதிதியாக கலந்து கொண் டார்.

பிரதம சாரண ஆணையாளர் சட்டத் தரணி மனோஜ் நாணயக்கார தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி பிரதம ஆணையாளர் மற்றும் உதவி பிரதம சாரணர் ஆணையாளர்கள், சார ணிய சங்கத் தலைவர், செயலாளர், பொரு ளாளர், பிரதமரின் செயலாளர், தேசிய மட்ட சாரணிய தலைவர்கள் மற்றும் மாவட்ட சாரணிய தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், “சமூகப் பணியில் ஈடுபடுவதன் முக்கி யத்துவத்தை இன்றைய இளம் தலை முறை உணர்ந்து செயல்படுவது காலத் தின் அவசியம். ஒழுக்கமும் சமூகப் பொறுப்பும் தியாக மனப்பான்மையும் கொண்ட இளைஞர்கள் மற்றும் யுவதி களை உருவாக்குவதில் சாரணிய இயக் கம் முக்கிய பங்காற்றி வருவது பாராட்டத் தக்கது.

கல்வி, பரீட்சைகளை மட்டும் மையப் படுத்தாமல், சுற்றுச் சூழலை நேசிக் கும் பண்பும், அதனை பாதுகாக்கும் செயல் பாடுகளும் மாணவர்களிடையே வளர வேண்டும். வீடும், பாடசாலையும் சுற்றி யுள்ள சூழலை சுத்தமாகவும் பாதுகாப் பாகவும் வைத்திருக்க சிறிய, சிறிய முயற்சிகளில் இருந்து தொடங்குவது அவசியம் என்று கூறினார்.

இந்த நிகழ்வில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சாரணர் தலைவர்கள் மற்றும் திரி சாரணர், சிரேஷ்ட சாரணர், கனிஷ்ட சார ணர், குருளை மற்றும் சிங்கிதி சாரணர் கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவருக்கு மறியல்!

(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய உப பொலிஸ் பரிசோதகர் யூ.எல்.எஸ். ஆப்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று சந்தேக நபரைக் கைது செய்தனர்.

சந்தேக நபர் 139 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளை 1000 ரூபாவுக்கு விற்பனை செய்தமை மற்றும் 310 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளைத் தன் வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்க ளுக்காகக் கைது செய்யப்பட்டார். சந் தேக நபரை நேற்று சனிக்கிழமை அக் கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அக்கரைப் பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.







# அடை மழையால் விவசாயிகள் கடும் நெருக்கடி நஷ்டஈடு வழங்க ஜனாதிபதி முன்வர வேண்டும்!

## நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் நளீர் கோரிக்கை



(நூருல் ஹுதா உமர்)

அம்பாறைமாவட்டத்தில்தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நஷ்டஈடு வழங்க ஜனாதிபதியும் விவசாய அமைச்சரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினருமான எம்.ஏ. நளீர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அறுவடை செய்யப்பட்ட நெல்லை, மழை காரணமாக உரிய முறையில் உலர்த்த முடியாத நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாகநெல்முளைவிடத்தொடங்கியுள்ளது. பெருமளவிலான விளைச்சல் பயன்பாடற்றதாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும் பல்வேறு வேளாண்மை நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடந்த அரசாங்கங்கள் செய்தது போல, ஈர நெல்லை கிலோ 100 ரூபாவுக்கு அரசு உடனடியாக கொள்வனவு செய்திருந்தால் இவ்வாறான இழப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கும். தற்போதைய அரசு அதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்யத் தவறியதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்து வருகின்றனர்.

தற்போதைய அரசு ஈர நெல்லை விவசாயிகளிடம் இருந்து உடனடியாக கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போதையஅவசரநிலையைக் கருத்தில் கொண்டு, அநுர குமார திசாநாயக்க மற்றும் கே.டி. லால் காந்த ஆகியோர் நேரடியாக தலையிட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடி நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், அரசு அவசர நிவாரணத் திட்டம் ஒன்றை அறிவித்து,ஈரநெல்கொள்வனவுசெய்வதுடன் வெள்ளத்தால் சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றார்.







# கெக்கிராவ விநாயகர் ஆலயத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கல்

## சந்நிதியான் ஆச்சிரமம் அன்பளிப்பு



அநுராதபுரம் மாவட்டத்தில் கெக்கிராவ பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜெயந்தி மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய கட்டடப் பணிக்காக ஒரு லட்சம் ரூபா நிதி ஆலய நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

நேற்று சனிக்கிழமை இந்த ஆலயத்தில் வைத்து நிதி வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

பெரும்பான்மையின மக்கள் அதிகளவில் வாழும் இந்தப் பிரதேசத்தில் அன்றாடம் கூலி தொழிலைச் செய்துவரும் 70 தமிழ் குடும்பங்களே வசிக்கின்றனர். இவர்களுக்கான வழிபாட்டுக்கு உரிய ஒரேயொரு ஆலயம் இதுவாகும்.

# மன்னாரில் உணவகங்கள் தொடர்பில் திடீர் சட்ட நடவடிக்கை முன்னெடுப்பு

(மன்னார் நிருபர்)

மன்னார் நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள உணவகங்கள் தொடர்ச்சியாக பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன என்று பொது மக்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு அமைவாக அடையாளப்படுத்தப் பட்டசிலஉணவகங்கள்மீதுசுகாதாரதுறையினர் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வாரம் மன்னார் நகரசபை சுகாதார பரிசோதகர் மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாது இயங்கி வந்த 3 உணவகங்கள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதி வைத்தியசாலை பகுதியை அண்டிய இரு உணவகங்கள் மீதும் மன்னார் உப்புக்குளம் மற்றும் பள்ளிமுனை வீதியில் இரு உணவகங்கள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரிய சுகாதார நடைமுறையை பின்பற்றாமை, கழிவகற்றல் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படாமை, அதிக அளவு இலையான்கள், கையுறை பயன்படுத்தாமை, சுகாதாரமற்ற முறையில் உணவுகளை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, சுகாதாரமற்ற முறையில் உணவு தயார் செய்தமை உள்ளடங்களாக பல்வேறு குற்றங்களை அடிப்படையாக கொண்டு உணவகங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.












# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு இன்றுடன் நிறைவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவத்தின் நிறைவு நாள் அமர்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமைஆரம்பமாகியபொதுப்பட்டமளிப்பு வைபவம் கடந்த நான்கு நாள்களில் 12 அமர்வுகளாக நடைபெற்று இன்று நிறைவடைந்தது.

இந்தமுறை 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர்.








# அல்லைப்பிட்டியில் படுகொலை செய்யப்பட்ட சிறுவனுக்கு நீதி கோரி யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் படுகொலையான சிறுவனுக்கு நீதி கோரி இன்று யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த 10ஆம் திகதி அதிகாலைவேளை பயணித்த ஹயஸ் ரக வாகனத்தை தாம் வழி மறித்தனர் என்றும் அதன்போது வாகனத்தை நிறுத்தாது சென்றமையால் வாகனத்தின் மீது மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் வாகன சாரதியான சிறுவன் உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

நிற்காமல் சென்ற வாகனத்தைப் பொலிஸார் வழிமறித்த பின்னரே துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது எனவும் அது பொலிஸாரின் திட்டமிட்ட படுகொலை எனவும் குற்றச்சாட்டுக்கள் எழும்பி வரும் நிலையில், படுகொலை செய்யப்பட்ட சிறுவனுக்கு நீதி கோரி போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து பொலிஸ் உத்தியோகஸ்தர்களையும் கைது செய்ய வேண்டும் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்.












# கட்டாக்காலிக் கால்நடைகளுக்கு சம்மாந்துறையில் கடும் நடவடிக்கை

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை, சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக அலையவிடப்பட்ட மாடுகளால் அன்றாடம் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன. பொதுச் சொத்துகள் மற்றும் பெறுமதியான பயிர் வகைகளும் சேதமடைந்து வருகின்றன என்று பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள் ளன என்று சம்மாந்துறை பிரதேச சபை தெரிவித்துள்ளது.



பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதிகளில் அலையும் மாடுகள் மக்களின் உயிர் மற்றும் சொத்துகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, கட்டாக்காலியாக மாடுகளை அலையவிடும் உரிமையாளர்கள் உடனடியாக அவற்றை தங்களது வீடுகள் அல்லது பண்ணைகளில் கட்டிப்பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது இறுதி அறிவித்தலாகும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபையால் பிடிக்கப்படும் ஒவ்வொரு மாட்டுக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஒரு நாள் பராமரிப்புச் செலவாக 2 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும். மூன்று நாள்களுக்குள் உரிய தண்டப் பணத்தைச் செலுத்தி மாடுகளை மீட்டுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாள்களில் நோய்வாய்ப்படும் அல்லது இறக்கும் மாடுகளுக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாடுகளின் சொந்தக்காரர்கள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் மாட்டுத் துண்டு (பண்ணைக் காட்) மற்றும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை மீறி தொடர்ந்தும் கட்டாக்காலியாக கால்நடைகளை அலைய விடும் பட்சத்தில், பிரதேச சபை சட்டத்தின் கீழ் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நீதிமன்றத்தில் ஒப்படைத்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பிரதேச சபை அறிவித்துள்ளது.

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேராளர் மாநாடு சாவகச்சேரியில்!

(பூ.லின்ரன்)

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேராளர் மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரியின் நகர சபையின் பொன் விழா மண்டபத்தில் ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்த மாநாட்டின் ஆரம்பத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர்களால்மங்களவிளக்கு ஏற்றப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழ் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

மாநாட்டில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர்கள், கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.












# இலங்கை தடுமாற்றம்

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் - 8 சுற்றில் இன்று மதியம் ஆரம்பித்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 146 ஓட்டங்களைச் சேர்க்க தற்போது பதிலுக்கு ஆடிவரும் இலங்கை அணி, ஒன்பதாவது ஓவரில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 52 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத் தடுமாறி வருகின்றது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் கடந்த 7ஆம் திகதி தொடங்கியது.

தற்போது சுப்பர் - 8 போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில், இன்று பிற்பகல் 3 மணிக்கு கண்டி - பல்லேகல மைதானத்தில் ஆரம்பித்த போட்டியில் இலங்கை – இங்கிலாந்து அணிகள் ஆடுகின்றன.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணியை இலங்கைப் பந்துவீச்சாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இதனால் அந்த அணி வீரர்களால் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை.

எனினும், பில் சால்ட் 62 ஓட்டங்களை அடித்துக்கொடுத்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ஓட்டங்களைச் சேர்த்தது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் டுமித் வெல்லகே 3 விக்கெட்டுகளைச் சாய்தார்.

பின்னர் 147 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய இலங்கை அணி, இச்செய்தி எழுதப்படும்போது ஒன்பதாவது ஓவரில் 52 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.



# அதிமுகவில் மரியாதை இல்லையாம்
## த.வெ.க.வில் இணைந்தார் தமிழ்ச்செல்வன்

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில் திமுக, அதிமுக, நாதக, தவெக என நான்கு முனை போட்டி நிலவுகிறது.

இளைஞர்கள் வாக்கை தமிழக வெற்றி கழகம் பிரிக்கக்கூடும் என பேசப்படுகிறது, தவெகவுக்கு அரசியல் அனுபவம் இல்லை, மக்களை எப்படிக் கையாள வேண்டும் என்று கூறத் தெரியவில்லை என்று விமர்சனங்களும் எழுந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில் அதிமுக முன்னாள் சபாநாயகர் தனபாலின் மகன் லோகேஷ் தமிழ்ச்செல்வன் தவெக தலைவர் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார்.

இதுகுறித்து பின்னர் செய்தி யாளர்களிடம் பேசுகையில், எனது தந்தை போன்ற மூத்தவர்களுக்கு அதிமுகவில் மரியாதை கிடையாது. சமீபத்தில் தந்தைக்கு மாரடைப்பு ஏற்பட்டபோது கூட கட்சி தலைமை நிர்வாகிகள் யாரும் தந்தையை சந்திக்கவில்லை, அதனால் மன வருத்தம் இருந்தது.

சிறு வயதில் இருந்தே விஜய் ரசிகன் நான். தனது தந்தை தனபால் நிர்பந்தத்தினால் தமிழக வெற்றி கழகத்தில் இணைவதில் தாமதமாக இருந்தது என தெரிவித்தார்.

அதிமுகவைச் சேர்ந்த தனபால் கடந்த, 2016 ஆண்டு அதிமுக ஆட்சி யின் போது சபாநாயகராகப் பதவி வகித்திருந்தார். தொடர்ந்து, தற்போது அவிநாசி தொகுதி சட்டமன்ற உறுப் பினராகவும் பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுகிறாரா குஷ்பு?

சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக சார்பில் குஷ்பு போட்டியிடவுள்ளார் என்று செய்திகள் வெளியான நிலை யில், குஷ்பு பதிலளித்துள்ளார்.

இன்று சென்னை விமான நிலை யத்தில் குஷ்பு செய்தியாளர்களை சந் தித்த போது, சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடுவீர்களா? என செய்தியா ளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு, ஒவ்வொரு முறையும் இந்தக் கேள்வி வருகிறது. யார் போட்டி யிடுகிறார்கள் என்பது முக்கியமில்லை, எந்த இடத்தில் நின்று ஜெயிக்கிறோம் என்பது தான் முக்கியம்.

தொகுதி பங்கீடு குறித்து பேச்சு முடிந்த பின்னரே கட்சியின் மூத்த தலைவர்கள் முடிவெடுப்பார்கள் எனத் தெரிவித்தார்.

மேலும் திமுக - தேமுதிக கூட்டணி



குறித்த கேள்விக்கு, யார் யாருடன் வேண்டுமானாலும் கூட்டணி வைக்க லாம், "அரசியலை பொறுத்தவரையில் நிரந்தர நண்பர், எதிரி என யாருமே கிடையாது" என்று தெரிவித்தார்.

விஜயகாந்த் உயிருடன் இருந்திருந் தால் இது நிச்சயமாக நடந்திருக்காது எனவும் தெரிவித்தார்.



# இணையவழி மோசடி மையங்கள் மனித உரிமை மீறலுக்குக் காரணம்

## ஐ. நா. மனித உரிமைகள் அலுவலகம் எச்சரிப்பு

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவிவரும் இணையவழி மோசடி மையங்கள் மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் எச்சரித்துள்ளது.

கம்போடியா, மியான்மர், லாவோஸ் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இத்தகைய மையங்கள் ஒரு "தன்னிறைவு பெற்ற நகரங்கள்" போலச் செயல்படுகின்றன. அங்கு சுமார் 3 லட்சம் பேர் துப்பாக்கி ஏந்திய காவலர்களின் கண்காணிப்பில் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப் படுகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக மேகாங் (Mekong) பிராந்தியத்தில் மட்டும் இந்த மோசடித் தொழில் ஆண்டுக்கு சுமார் 43.8 பில்லியன் டொலர் மதிப்பிலான வருவாயை ஈட்டுவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

இங்கு பணிபுரியும் நபர்கள் பெரும்பாலும் அதிக சம்பளம் தரும் வேலைவாய்ப்பு விளம்பரங்கள் மூலம் ஏமாற்றப்பட்டு, ஆள் கடத்தல் முறையில் உள்ளே கொண்டு வரப்படுகின்றனர்.

அங்கு அவர்களின் கடவுச்சீட்டுகள் பறிக்கப்பட்டு, கம்பிவேலிகளால் சூழப்பட்ட வளாகங்களுக்குள் அடைத்து வைக்கப்படுகின்றனர்.

இலக்குகளை எட்டத் தவறுபவர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர் என்றும் மின்சார அதிர்ச்சி, பாலியல் வன்கொடுமை மற்றும் பட்டினி போன்ற சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் எனவும் உயிர் பிழைத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, சமூக ஊடகங்கள் மூலம் நபர்களைக் கண்டறியவும், போலி உரையாடல்களை உருவாக்கவும் தற்போது செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை இந்தக் குற்றக் கும்பல்கள் பயன்படுத்துவது கவலையளிப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்த மோசடி மையங்கள் அரசு அதிகாரிகளின் பின்னணியுடன் செயல்படுவதால், சட்ட அமுலாக்கத் துறையினரால் இவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று ஐ.நா. சுட்டிக்காட்டியுள்ளது.

2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் குற்றவியல் மாநாட்டை முன்னிட்டு, உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து இதற்குத் தீர்வு காண வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களைக் குற்றவாளிகளாகக் கருதாமல் அவர்களை மீட்டெடுத்து மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்றும் இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

# ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் அல்பாக் கட்சி போட்டியிடுவது சந்தேகமே!

## தலைவர் கென்னி மெக்அஸ்கில் தெரிவிப்பு

ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத் தேர்தலில் பிரிவினைவாதத்துக்கு ஆதரவான அல்பா கட்சி போட்டியிடுவது சந்தேகம் என்று தலைவர் கென்னி மெக்அஸ்கில் தெரிவித்துள்ளார்.

கடுமையான நிதி நெருக்கடி மற்றும் உட்கட்சி பூசல்கள் காரணமாக எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் பங்கேற்க இயலாத சூழல் ஏற்பட்டுள்ளது என்று அவர் கட்சி உறுப்பினர்களுக்கு அனுப்பிய மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஸ்கொட்லாந்து ஜனாதிபதி அலெக்ஸ் சால்மண்ட் என்பவரால் 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தக் கட்சி, தற்போது தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்வதற்கான தகுதியை இழக்கும் நிலையில் உள்ளது.



நிதிச் சிக்கல்கள், கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் கிறிஸ் மெக்லெனி நீக்கப்பட்ட விவகாரம் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்த பொலிஸார் விசாரணை ஆகிய காரணங்களால் கட்சி மேலும் பலவீனமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தற்போதைய நிதி நிலைமையைக் கொண்டு ஊழியர்களுக்கான ஊதியம் மற்றும் தேர்தல் செலவுகளைச் சமாளிக்க முடியாது என்றும் மெக்அஸ்கில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

அலெக்ஸ் சால்மண்டின் மறைவுக்குப் பிறகு அல்பா கட்சியின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ள நிலையில், அவரது உறவினரும் வேட்பாளருமான கிறிஸ்டினா ஹென்றி போன்ற சிலர், கட்சியின் மரபைக் கைவிடக்கூடாது என்று தலைமையின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கனடா முரசு

பக்கங்கள் - 04

ஞாயிற்றுக்கிழமை 22/02/2026

## வீடுகளின் விற்பனை பனிப்புயலால் வீழ்ச்சி



தெற்கு ஒன்றாரியோவில் ஏற்பட்ட கடுமையான பனிப்புயல் காரணமாக, கடந்த ஆண்டுடன்

C2▶





# அமெரிக்காவை நம்ப முடியாது!

## கனேடியர்களின் கருத்து அதுதான்

அமெரிக்கா கனடாவின் கூட்டாளர் அல்ல, அது ரஷ்யாவைவிட உலக அமைதிக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் என கனேடியர்கள் கருதுவது சமீபத்திய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

அமெரிக்க மற்றும் பிரித்தானிய ஆய்வமைப்புகள் இரண்டு இணைந்து, கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியிலுள்ள ஆயிரக்கணக்கான பொதுமக்களிடம் அமெரிக்கா குறித்த ஆய்வொன்றை நடத்தின.

அண்மையில் அந்த ஆய்வுகளின் முடிவுகள் வெளியான நிலையில், 58 சதவிகித கனேடியர்கள், அமெரிக்கா கனடாவின் கூட்டாளர் அல்ல என கருதுவதாக தெரிவித்துள்ளார்கள்.

இதே கருத்து, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் அமெரிக்க மக்களிடையேயும் உள்ளது.

C2▶

# இந்தியாவுக்கு அரசு முறைப்பயணம் மேற்கொள்கின்றார் கனடாப் பிரதமர்

## வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில்

கனடா பிரதமர், அடுத்த மாதம், அதாவது, மார்ச் மாதம் இந்தியா செல்ல உள்ளார் எனர் தகவல் வெளியாகியுள்ளது.

கனடா பிரதமரான மார்க் கார்னி, மார்ச் மாதம் முதலாம் 2ஆம் திகதிகளில் இந்தியா செல்ல இருக்கிறார்.

இரண்டு நாள்களை டெல்லி மற்றும் மும்பை நகரங்களில் செலவிட இருக்கும் கார்னி, பாதுகாப்பு, வர்த்தகம், ஆற்றல், வேளாண்மை முதலான பல்வேறு துறைகள் தொடர்பில் ஒத்துழைப்பு குறித்து இந்தியாவில் பேச்சுவார்த்தைகள் நடத்த உள்ளார்.

மார்க் கார்னியுடன், அவரது மனைவியான டயானா ஃபாக்ஸ் கார்னி, வெளியுறவு அமைச்சரான அனிதா ஆனந்த், நிதி அமைச்சரான ஃப்ராங்கோயிஸ் பிலிப் ஷேம்பெய்ன் முதலான பல அமைச்சரவை அமைச்சர்களும் இந்தியா செல்ல உள்ளார்கள்.

2018ஆம் ஆண்டு, அப்போதைய கனேடிய பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ இந்தியாவுக்கு மேற்கொண்ட அரசு முறைப்பயணம் பெரும் சர்ச்சையில் முடிந்த நிலையில், கடந்த எட்டு ஆண்டுகளில் கனேடிய பிரதமர் ஒருவர் இந்தியா செல்வது இதுவே முதன்முறையாக அமைய உள்ளது குறிப்பிடத்தக்கது.



# ரொரன்ரோவில் இதுவரை தீர்க்கப்படாத இலங்கைச் சிறுமியின் கொலை வழக்கு



கனடாவின் ரொரன்றோ பொலிஸ் துறையால் இதுவரை தீர்க்கப்படாத கொலை வழக்குகளின் எண்ணிக்கை 800.

அவற்றில், ஓர் அப்பாவி இலங்கைச் சிறுமியின் கொலை வழக்கும் ஒன்று!

1999ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 12ஆம் திகதி, ரொரன்றோவிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் தன் குடும்பத்துடன் வாழ்ந்துவந்த ஷர்மினி ஆனந்தவேல் (வயது15), புதியவேலை ஒன்றில் சேருவதற்காக வீட்டை விட்டுப் புறப்பட்டாள்.

ஆனால், அதற்குப் பிறகு அவள் வீடு திரும்பவேயில்லை!

நான்கு மாதங்களுக்குப் பிறகு, டோன் நதிக்கரையில் அவரது உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விடயம் என்னவென்றால், இன்று வரை ஷர்மினிக்கு என்ன நடந்தது, அவரைக் கொலை செய்தது யார் என்னும் கேள்விகளுக்கு பதில் கிடைக்கவேயில்லை.

ஷர்மினி வாழ்ந்துவந்த அதே அடுக்குமாடிக் குடியிருப்பில் வாழ்ந்துவந்த ஸ்டான்லி டிப்பெட் (Stanley Tippett, 23) என்னும் நபர் வழக்கில் முக்கிய சந்தேக நபராக சேர்க்கப்பட்டார்.

அவர் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஆனால், அது ஷர்மின் கொலை வழக்குக்காக அல்ல, ஒரு 12 வயது சிறுமியை சீரழித்த வழக்குக்காக!

தன் குடும்பத்தினர் உட்பட பலரிடம், தான் பொலிஸ் துறையில் வேலை பார்க்கின்றார் எனக் கூறிவந்த டிப்பெட் தான் ஷர்மினிக்கு வேலைக்கு ஏற்பாடு செய்துகொடுத்தார்.

ஆனால், அந்த வேலையில் சேருவதற்காக புறப்பட்ட ஷர்மினி, அதற்குப் பின் வீடு திரும்பவேயில்லை.

ஆகவே, அவர் மீது பொலிஸாரின் மொத்த கவனமும் குவிந்தாலும், அவர்தான் ஷர்மினியின் மரணத்துக்குக் காரணம் என்பதற்கான ஆதாரம் எதுவுமே கிடைக்கவில்லை.

ஆக, கனடாவின் ரொரன்றோ பொலிஸ் துறையால் கண்டுபிடிக்கப்படாத கொலை வழக்குகளில் சிறுமி ஷர்மினியின் வழக்கும் ஒன்றாகிவிட்டது.

ஷர்மினி வழக்கை தலைமையேற்று விசாரித்த பொலிஸ் அதிகாரியான மாட்க்ரோன் (Matt Crone) பணி ஓய்வு பெற்றபோது, ஷர்மினி வழக்கை தீர்க்க முடியாமல் போனமைக்காக ஷர்மினி குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம்.

---

## அமெரிக்காவை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், 57 சதவிகிதம் பேர், ஆபத்து மற்றும் சவால்கள் எழும் நேரத்தில் அமெரிக்காவை நம்பமுடியாது என்றும் கூறியுள்ளார்கள்.

மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான கனேடியர்கள், அமெரிக்கா மற்ற நாடுகளின் பிரச்சினைகளை தீர்ப்பதைவிட, பிரச்சினைகளை உருவாக்கத்தான் செய்கிறது என்று கூறியுள்ளார்கள்.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்தே, கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைக்கப்போவதாக மிரட்டி வருவதுடன், கனடா மீது கூடுதல் வரிகள் விதித்த விடயம், அமெரிக்கா குறித்த கனேடியர்களின் எண்ணத்தை பெரும் அளவில் மாற்றிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

---

## வீடுகளின் விற்பனை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் வீட்டு விற்பனை 16.2 சதவீதம் சரிந்துள்ளதாக Canadian Real Estate Association (CREA) தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் நாடு முழுவதும் 22,533 குடியிருப்புகள் கைமாறியுள்ளன என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. பருவ கால மாற்றங்களுக்கு ஏற்ப சரிசெய்யப்பட்ட கணக்கீட்டின்படி, ஜனவரி மாத விற்பனையானது 2025 டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதம் குறைந்துள்ளது.

இந்த வீழ்ச்சி முதன்மையாக Greater Golden Horseshoe மற்றும் தென்மேற்கு ஒன்றாரியோ பகுதிகளில் ஏற்பட்டதாக CREA-வின் மூத்த பொருளாதார நிபுணர் Shaun Cathcart தெரிவித்துள்ளார். எனவே, இந்த மாற்றம் தேவையில் ஏற்பட்ட குறைவை விட, பனிப்புயலினால் ஏற்பட்ட தாக்கமாகவே இருக்கக்கூடும் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

ஜனவரி மாத இறுதியில் அனைத்து கனேடிய MLS அமைப்புகளிலும் விற்பனைக்காக 140,680 சொத்துக்கள் பட்டியலிடப்பட்டிருந்தன என CREA தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் அதிகம் என்றாலும், அந்த ஆண்டின் நீண்டகால சராசரியை விட 11.4 சதவீதம் குறைவாகும். சந்தை மீட்சியின் உண்மையான அளவு என்ன என்பது இந்த வசந்த காலத்தில் தெரியவரும் என்று BMO-வின் மூத்த பொருளாதார நிபுணர் Robert Kavcic கூறியுள்ளார்.



# கனடாவில் விரைந்த அனுமதிக்கான குடியேற்ற விதிமுறைகளில் மாற்றம்

## இராணுவப் பிரிவினருக்கும் முன்னுரிமை

கனடாவின் குடியேற்றக் கொள்கையில் பாரிய மாற்றங்களை மேற்கொண்டுள்ள அந்நாட்டு அரசாங்கம், புதிய முன்னுரிமைப் பிரிவுகளின் கீழ் விண்ணப்பங்களைக் கோருவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஆராய்ச்சி, சுகாதாரத் துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளைச் சேர்ந்த நிபுணர்களுக்கும், இராணுவப் பிரிவில் இணைந்து கொள்ளும் ஆள்சேர்ப்பாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாக பெப்ரவரி 18ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மார்க் கார்னியின் தலைமையிலான புதிய அரசாங்கத்தின் இலக்குகளுக்கு அமைய இந்த மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. கனடாவிற்கு வருகை தரும் நிரந்தர வதிவிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் அதேவேளை, திறமையான பணியாளர்கள் மற்றும் புத்திஜீவிகளை ஈர்ப்பதுடன், அமெரிக்காவிலான தங்கியிருப்பைக் குறைத்து நாட்டின் பாதுகாப்புத் திறனை மேம்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்.

நாட்டில் நிலவும் வீடமைப்பு நெருக்கடி மற்றும் சமூக சேவைகளுக்கான அழுத்தங்களைக் குறைக்கும் பொருட்டு, குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்த கனடா கடந்த சில வருடங்களாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த நிலையில், அத்தியாவசிய துறைகளுக்குத் தேவையான பணியாளர்களைக் கண்டறியும் வகையில் இந்த புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட குடியேற்றத்துறை அமைச்சர் லீனா மெட்லெஜ் தியாப் (Lena Metlege Diab), 2026ஆம் ஆண்டிற்கான எக்ஸ்பிரஸ் என்ட்ரி முறைமையின் மாற்றங்கள், கனடா எதிர்கொள்ளும் பாரிய தொழிலாளர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உதவும் எனத் தெரிவித்தார். குறிப்பாக, நாட்டுக்கு வருகை தரும் முதல் நாளிலேயே பங்களிப்பு வழங்கக்கூடிய திறமையாளர்களை ஈர்க்க இது வழி வகுக்கும் என அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய முன்னுரிமைப் பிரிவுகள்: புதிய விதிகளின் கீழ் பின்வரும் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது:

* ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள்.

# விமானிகள் (Pilots) மற்றும் விமானத் தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்ட போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள்.

# கனடாவில் அனுபவம் பெற்ற வெளிநாட்டு வைத்தியர்கள்.

# கனடா ஆயுதப் படைகளில் இணைந்து கொள்ளும் தகுதியுள்ள வெளிநாட்டு இராணுவ விண்ணப்பதாரிகள் (குறிப்பாக இராணுவ வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் விமானிகள்).

“மாறிவரும் பொருளாதாரத்திற்குத் தயாராக உள்ள ஒரு உழைக்கும் சமூகத்திலேயே கனடாவின் எதிர்காலம் தங்கியுள்ளது” என அமைச்சர் தியாப் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத் துறையில் அமெரிக்காவைச் சார்ந்திருப்பதைத் தவிர்க்கும் நோக்கில், பிரதமர் மார்க் கார்னி கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி புதிய பாதுகாப்பு மூலோபாயமொன்றை அறிவித்திருந்தார். இதன்படி, எதிர்வரும் தசாப்தத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான அரசாங்க முதலீட்டை 85 வீதத்தினால் அதிகரிக்கவும், பாதுகாப்புத் துறை ஊடான வருமானத்தை 240 வீதத்திற்கும் மேலாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 125,000 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனைய நேட்டோ உறுப்பு நாடுகளைப் போலவே, கனடாவும் தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்புச் செலவினத்தை 2035ஆம் ஆண்டளவில் 5 வீதமாக அதிகரிக்க உறுதி பூண்டுள்ளது.

இதேவேளை, பிரெஞ்சு மொத் தேர்ச்சி உடையவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஏனைய தொழிற்றுறைத் திறமையாளர்களுக்காக ஏற்கனவே நடைமுறையிலுள்ள எக்ஸ்பிரஸ் என்ட்ரி பிரிவுகளும் புதிய மாற்றங்களுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெ. பொருள்களை கனடாத் தயாரிப்பு என நம்ப வைத்து விற்கும் தந்திரம் அம்பலமானது

## நிறுவனம் ஒன்றிற்கு பத்தாயிரம் டொலர்கள் அபராதம்




கனேடிய தயாரிப்புகள் என மக்களை நம்பவைத்த நிறுவனம் ஒன்றிற்கு பத்தாயிரம் டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைக்கப் போகிறார் என மிரட்டியமையும், கனடா மீது கூடுதல் வரிகள் விதித்தமையும் கனேடியர்கள் பலருக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, அமெரிக்காவைப் புறக்கணிக்கும் பல்வேறு விடயங்களைச் செய்து, அதன் மூலம் ட்ரம்புக்கு சவால் விட நினைக்கிறார்கள் கனேடியர்கள்.

அவ்வகையில், அமெரிக்கத் தயாரிப்புகளைப் புறக்கணிப்பதன் மூலம், வேறு வகையில் கூறினால், உள்நாட்டு தயாரிப்புகளை வாங்குவதன் மூலம், தங்கள் நாட்டுப்பற்றை காட்ட விரும்புகிறார்கள் கனடியர்கள் பலர்.

விடயம் என்னவென்றால், உள்நாட்டு தயாரிப்புகள் என மக்கள் கருதும் பல தயாரிப்புகள் உண்மையில் அமெரிக்க தயாரிப்புகள் என இப்போது தெரியவந்துள்ளது.

குறிப்பாக, Betty Crocker's chocolate chip cookie mix என்னும் தயாரிப்பில், 'Canada's #1 Selling Baking Mix Brand' என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல, Habitant pea soup என்னும் உணவின் டின் மீது 'Designed in Canada' என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், McCain Super Spirals french fries என்னும் உணவுப்பொருளின் லோகோவில், அயிடந இலையின் படமும், 'Proud Canadian Company' என்னும் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

விடயம் என்னவென்றால், இந்த தயாரிப்புகளை திருப்பி பின்பக்கம் பார்த்தால், அவற்றில், 'Product of USA', அதாவது, முன்பக்கம் பார்த்தால் கனேடிய தயாரிப்புகள் போல் தோன்றும் இந்த உணவுபொருள்களின் கவர் அல்லது டின்களின் பின்பக்கத்திலோ, அமெரிக்க தயாரிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் செய்யும் இந்த விடயம், தங்களை ஏமாற்றுவது போல் உள்ளதாக வருத்தம் தெரிவித்திருந்தார்கள் கனேடியர்கள் பலர்.

இந்நிலையில், கனேடிய தயாரிப்பு என மக்களை தவறாக வழிநடத்தும் விதத்தில் விளம்பரம் செய்திருந்த Real Canadian Superstore என்னும் நிறுவனத்துக்கு கனடா உணவு கண்காணிப்பு ஏஜென்சி அபராதம் விதித்துள்ளது.

அந்நிறுவனத்தின் சில தயாரிப்புகளில் கனேடிய தயாரிப்பு என்பது போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அந்த தயாரிப்புகள் கனேடிய தயாரிப்புகள் அல்ல என்பதால் அந் நிறுவனத்துக்கு 10,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக கனடா உணவுக் கண்காணிப்பு ஏஜென்சி தெரிவித்துள்ளது.

# மெக்சிக்கோவுக்குச் சுற்றுலா சென்ற கனடியர்களுக்கு அதிர்ச்சி அனுபவம்



மெக்சிக்கோவில் விடுமுறை கழித்து திரும்பிய பல கனடியர்கள் கடுமையான வாந்தி, வயிற்று வலி மற்றும் வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகளால் அவதிப்பட்டு வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

சிலர் கனடாவிற்கு திரும்பிய பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஹமில்டனில் இருந்து தனது குடும்பத்துடன் மெக்சிக்கோவின் விடுதி ஒன்றுக்கு பயணம் செய்த கெல்லி பென்னட், தங்கள் விடுமுறை மூன்றாம் நாளிலிருந்து "ஒருவருக்குப் பிறகு ஒருவர் உடல்நலக்குறைவால் விழுந்தனர்" என தெரிவித்தார்.

"ஐந்து, ஆறு பேராக ஒரே நேரத்தில் பாதிக்கப்பட்டோம். பல குடும்பங்கள் அறைகளிலேயே முடங்கிக் கிடந்தனர். இது தெளிவாகப் பரவிய ஒரு தொற்று நோய்" என அவர் கூறினார்.

குழந்தைகள் பலர் படுக்கையிலேயே இருந்தனர் எனத் தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு திரும்பிய பின்னர் மருத்துவ பரிசோதனைகளில் உணவு மூலம் பரவும் தொற்று மற்றும் வேகமாக பரவும் நோரோவைரஸ் தொற்று இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

இந்த வைரஸ் பொதுவாக வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கை ஏற்படுத்துகிறது.

மேலும், மற்றொரு பயணியான வாரன் கரியர் தனது தோழி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிவித்தார்.

அவருக்கு செய்யப்பட்ட பரிசோதனையில் ஈகொலி Escherichia coli (E. coli) தொற்று உறுதிசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது.